மெய்ஞ்ஞானக்கொடி

# இந்து வேதம்

மெய்ஞ்ஞானக்கொடி

## தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்



## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அருளியவை


**கார்த்திகை மாத வெளியீடு (Nov-Dec 2013)**

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,114


# புரட்சி மயங்கக் கூடாது! ...

## இ.ம.இ. நிர்வாகக் கட்டமைப்பு


காணிக்கை ரூ.5/-

# இந்துவேத விடுதலை

... 19ஆம் நூற்றுண்டில் வாழ்ந்த சந்திரகுலத்திற்குரிய சித்தர் கருவூருர் பாரம்பரியத்தில் தோன்றிய கண்டப்பகோட்டை சித்தர் ஏளனம்பட்டியார் உ.இராமசாமி பிள்ளையவர்கள் ஆசியாக் கண்டம் முழுவதும் மட்டுமின்றி உலகம் முழுவதும் தேடி அலைந்து இந்துவேதத்தையும் இந்துவேத வரலாற்றையும் பற்றிய பல பேருண்மைகளைத் தொகுத்திட்டார். அப்பேருண்மைகள் இந்துவேத விடுதலை முழக்கத்தை பிறப்பெடுக்கச் செய்தன. ஆனுல் சித்தர் ஏளனம்பட்டியாரோ முதல் இந்திய விடுதலைப் போர் எனப்படும் சிப்பாய்க் கலகத்தின் கதாநாயகராக உயிர் மூச்சாக செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதால், இந்துவேத விடுதலை முழக்கம் இந்துவேத மத நாடான இந்தியாவின் விடுதலை முழக்கமாக மாறிற்று. ஆனுல் இவருடைய சமகாலத்தவரான அருட்பெருஞ்சோதி ஆண்டவர், அருட்பா கொடைவள்ளல், வடலூர்ப் பெருவெளி வள்ளல்பெருமான் இராமலிங்க அடிகளார் அவர்கள் ஹிந்து வேதத்தையும், சமசுகிருத வேத ஆகமத்தையும், சாத்திறச் சம்பிறதாயச் சடங்குகளையும், கோத்திர நம்பிக்கைகளையும் கடுமையாகச் சாடித் தகர்த்து மெய்யான இந்துவேத விடுதலைக்குரிய **"இந்துவேத விடுதலை முழக்கத்தை எழுப்பினுர்"**. அந்த இந்துவேத விடுதலை முழக்கம்தான் ஆத்திகர்களையும், நாத்திகர்களையும் இந்துவேதம் பற்றிச் சிந்திக்கச் செய்தன ... ...

---

# உள்ளுறை

1. **புரட்சி மயங்கக் கூடாது.**
2. **இ.ம.இ. நிர்வாகக் கட்டமைப்பு**
3. **மார்கழி மாதம் பீடை மாதம் என்பது சரியா?**
4. **தீபாவளிக்கும் நரகாசுரனுக்கும் தொடர்பில்லை**
5. **ஒளி வணக்கமே இந்து மதம்.**
6. **கார்த்திகைத் திருநாள் எதற்கு?**

— — — — — — — — — — — —

# புரட்சி மயங்கக் கூடாது!

## - சித்தர் -

நண்ப! 'புரட்சி' என்பது ஒரு கட்டழகு மிக்க இளம் கன்னிப் பெண் போன்றது. அதை நெடுங்காலம் மயங்க வைக்கக் கூடாது. அதையுணராமல் எந்த நாட்டு மக்கள் புரட்சியை கன்னியாகவே வைத்து அழகு பார்த்து களிப்புற்று கவிதைகளையும், கலை நிகழ்ச்சிகளையும், கட்டுரைகளையும், காப்பியங்களையும் படைத்து வருகிறார்களோ; அவர்கள் நெடுங்காலம் மானம், மரியாதை, உரிமை, நிம்மதி, நிறைவு, அமைதி, மதிப்பு முதலிய அனைத்தையும் இழந்து தலைகுனிந்து அடிமை வாழ்வு வாழ நேரிடும். இப்பேருண்மையை தெரியாதவர்களை விட புரியாதவர்களே அதிகமாகி இருக்கிறார்கள். அதனால்தான் எத்தனையோ நாடுகளில் புரட்சிக்குரிய எல்லா சூழல்களும் கனிந்து பழுத்து உதிர ஆரம்பித்தும் கூட புரட்சி நிகழ காலதாமதம் ஆகி விடுகின்றது. அதனால், கனிகள் அழுகிப் போகவும் தவறானவர்களால் திருப்பப்படவும் நேரிட்டு விடுகின்றது.

புரட்சியை தயங்கவோ! மயங்கவோ! வைக்கக் கூடாது. ஏனெனில், புரட்சி விரோதிகளும், துரோகிகளும் புரட்சியை போலித்தன்மையும், கூலித்தன்மையும் உடையதாக ஆக்கி விடுவார்கள். அதன் மூலம் புரட்சியை ஒரு தொத்து நோய் என்று பிரகடனப் படுத்தி (contagious disease) அதை மருத்துவம் பார்த்தே ஒழித்து விடுவார்கள். இந்தியத் துணைக்கண்டத்திலும், வளர்ந்து வரும் முதலாளித்துவ நாடுகளிலும் இதுதான் நடந்து கொண்டிருக்கின்றது.

நண்ப! நமது இந்தியத் துணைக்கண்டம் பல சமுதாய இயக்கங்களை நம்பி நம்பி ஏமாந்து விட்டது. எந்த ஓர் இயக்கமும் நமது வரலாற்று திருப்பு மையத்தை உருவாக்கும் பணியினை கருவாக்கவேயில்லை. ஆனால், மக்களை கள்ளச்சந்தையின் மூலம் கொள்ளையடிப்போரும், உழைப்புக்கேற்ற ஊதியம் கொடுக்காமல் பாட்டாளி வர்க்கத்தை சுரண்டுகின்றவர்களும் அடிக்கடி புதிய புதிய பெயர்களில் இயக்கங்களை ஏற்படுத்தி மக்களை

திசைதிருப்பிக் கொண்டே யிருக்கின்றுர்கள். இதனுல், இல்லாமையும், கல்லாமையும், பற்ருமையும், வறுமையும் மிகுந்து பல நூருயிரக் கணக்கான மக்கள் நெருப்பில் விழுந்த புழுப்போல துடிதுடித்து மாண்டு கொண்டிருக்கிருர்கள். ஆண்டுகளோ ஓடிக் கொண்டிருக்கின்றன. இனியும் பொறுப்பதற்கில்லை என்று இந்து மதத்தின் இறைவர்களும், கடவுள்களும், தெய்வங்களும், தேவர்களும், இருடிகளும், ... கூக்குரலிட்டுப் போர்க்கோலம் பூண்டு மக்களைக் காக்கப் புறப்பட்டு விட்டார்கள்.

நாம் நமது பணியினை உணர்த்தப்பட்டு விட்டோம். எனவே, இனி தயங்கவோ, மயங்கவோ செய்யாமல் புவிகாக்கும் புரவலர்களான எல்லாம் வல்ல பரம்பொருளின் வடிவங்களுக்கு பக்கபலமாகி புரட்சிக்குப் புறப்பட்டேயாக வேண்டும். மலைமுகடுகளிலும், அடர்காடுகளிலும், இருண்ட குகைகளிலும், பூட்டிய கருவறைக்குள்ளும் நீள்தவத்தில், நெடிய மௌனத்தில் இருந்து வந்திட்ட தேவாதி தேவர்களும் இந்துமதத்தின் பெயரால் நொந்து கிடக்கும் ஏழை, எளிய, பாமர, பாட்டாளி மக்களை பாதுகாக்க புரட்சிப் பணியினை துவக்கி விட்டார்கள். எனவே, சமுதாயப் புரட்சி, அரசியல் புரட்சி என்ற இரண்டு கட்ட புரட்சி நிலைகளை உலகியலுக்கேற்ப திட்டமிட்டு செயலாற்ற வேண்டிய பொறுப்பு நம்மிடமே ஒப்படைக்கப்பட்டு விட்டது. இந்த அப்பட்டமான உண்மையை இனியும் மூடி மறைக்க முடியாது. எனவே திட்டமிடுவோம், கட்டுப்பாட்டோடு பணியாற்றுவோம்!

நமக்குத் தலைவர்கள் இந்துமதத்தின் தெய்வங்களும், தேவர்களும், இறைவர்களும், கடவுள்களும், இருடிகளும்தான். நமது புரட்சிக் கொள்கையும், நெறியும், குறிக்கோளும் இந்துமதம்தான். நமது புரட்சித் தத்துவம் நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள், மந்திறங்கள், எந்திறங்கள், தந்திறங்கள், அருள்வாக்குகள், அருள்வாசகங்கள், மருள்வாக்குகள், மருள்வாசகங்கள், குருவாக்குகள், குருவாசகங்கள், கருவாக்குகள், கருவாசகங்கள், திருவாக்குகள், திருவாசகங்கள், ஆகமங்கள், மீமாம்சைகள், ... முதலியவைகள்தான். ஆனுல், நமது இந்தியத் துணைக்கண்டத்தில் வேற்று மதங்களும், மாற்றுக் கட்சிகளும், நூற்றுக்கணக்கான சாதிசமய வட்டாரங்களும், இயக்கங்களும், இனநல கூட்டங்களும் இருக்கின்றன என்பதை நினைவில் கொண்டே செயலாற்றிட

வேண்டியவர்களாக இருக்கின்றோம் நாம். ஆனால், நாம் இவைகளைக் கண்டு அச்சப்படவோ, கூச்சப்படவோ தேவையில்லை. ஏனெனில், நாம் ஒன்றுக்கும் உதவாத, எதையும் சாதிக்க முடியாத, யாருக்குமே உண்மையான நன்மை செய்ய முடியாத அரசியல் புரட்சி (Political Revolution) செய்ய விரும்பவில்லை.

அதாவது நாம் விரும்புவது 'சமுதாயப் புரட்சி' (Social Revolution) மட்டுமே. அதுவும் அறியாமையும், அடிமைப் பண்பும், தன்னல வெறியும், சுரண்டல் போக்கும், ஆதிக்க மோகமும், அப்பாவித் தன்மையும், ஏமாளிப் போக்கும் மிகுதியாக உடைய இந்தியத் துணைக் கண்டத்தில் தொழில் புரட்சியோ (Industrial Revolution), பொருளாதாரப் புரட்சி (Economic Revolution) செய்வதன் மூலம் சமுதாயப் புரட்சியையும், அரசியல் புரட்சியையும் உருவாக்கவே முடியாது என்ற பேருண்மையைப் புரிந்தவர்களே நாம். எனவேதான், நாம் மிக வெளிப்படையாக தனிமனித வாழ்வில் புரட்சியினை (Revolution in Individual Life) உருவாக்கிடல் வேண்டும். அதன்மூலம், நாடு தழுவிய பண்பாட்டுப் புரட்சியை (The Cultural Revolution) உருவாக்கிடல் வேண்டும். அதன்பிறகு சாதி மத வட்டார இன வேறுபாடு இல்லாத **'சமுதாயப் புரட்சியினை'** பொருளாதார சமத்துவத்தின் நோக்கமாகக் கொண்டு தோற்றுவித்து வளர்த்து முழுமையாக்கி அதன் மூலமே **'அரசியல் மறுமலர்ச்சியை'** (Political Renaissance) உருவாக்குவதே நமது தெளிவான செயல்திட்டம். இது கம்யூனிசுடுகள் கூறுகின்ற வர்க்கப் போராட்டத்தினின்று வேறுபட்டது, மாறுபட்டது என்பதை வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம் நாம். ஏனெனில், இந்த மண்ணுலகில் மனித இனம் தோன்றுவதற்கு முன்பே தோன்றி வளர்ந்த இந்துமதத்தையே முழுக்க முழுக்க நம்பி, விரும்பி, ஏற்றுக்கொண்டு, ஒப்புக்கொண்டு புரட்சிக்குப் புறப்பட்டு இருப்பவர்கள் நாம்.

நண்ப! நாம் நம்மை மதவாதிகள் என்று ஒப்புக் கொள்கின்றோம். ஆனால், அதே நேரத்தில் **மிதவாதிகளல்ல** என்பதனை ஒவ்வொரு சொல்லாலும் செயலாலும் வெளிப்படுத்தி வருகிறோம் நாம். எனவே, இந்தியத் துணைக்கண்டத்தில் வாழுகின்ற எந்த ஓர் அமைப்பும் அல்லது இயக்கமும் நம்மை விரோதிக்கவோ, நமக்குத் துரோகம் செய்ய முற்படவோ,

சில தனிமனிதர்களும், சில சிறுசிறு கும்பல்களும் நம்மை எதிர்த்துப் போராடியே தீரும் என்பது தவிர்க்க முடியாத வரலாற்றுப் பேருண்மையாகும். ஆனால், அவர்களும் அவைகளும் இந்த நிலப்பரப்பிலிருந்தே ஒழிக்கப் படுவதோடு இந்திய மக்களின் நினைவுகளிலிருந்து அழிக்கப் படுவார்கள். ஏனெனில், நமது புரட்சிக்கு வழிகாட்டிகளாக, வழித்துணைவர்களாக, தலைவர்களாக இருப்பவர்கள் எங்கும் நிறைந்த, எல்லாம் வல்லதாயுள்ள, ஏகப் பரம்பொருளான இறைவர்கள், கடவுள்கள், தெய்வங்கள், தேவர்கள், இருடிகள், அமரர்கள், கணங்கள், ... முதலிய இன்னோரன்ன பலரும் ஆவார்கள்.

மேலும், இவர்களை நம்பியே செயல்பட்ட அண்ணல் மகாத்மா காந்தியடிகள் வெளிநாட்டுப் பகைவர்களையே வென்றார் என்கின்றபோது, நாம் ஏன் உள்நாட்டு பகைவர்களை வெற்றி கொள்ள முடியாது. அதிலும், நாம் மேலே குறிப்பிட்ட அனைத்துக் கடவுள்களுக்கும், தெய்வங்களுக்கும், தேவர்களுக்கும் வாரிசாக இருப்பவர்கள். அதாவது, நாம் அண்ணல் காந்தியின் அறவழியில், அன்புவழியில், அமைதிவழியில், மென்மை வழியில், போராட்ட வழியில் புரட்சியைச் செய்திட்டாலும் நமது தலைவர்களான இறைவர்களும், கடவுள்களும், தெய்வங்களும், தேவர்களும், தேவதைகளும், அமரர்களும், வானவர்களும் கையில் ஆயுதமேந்தி அப்பொழுதே நம்மைக் காக்கத் தயாராகி விட்டார்கள். எனவே, நாம் பயப்படவே தேவையில்லை. நன்மைக்காக ஆயுதமேந்திய ஒரு மாபெரும் அருட்படை தயாராக இருக்கிறது! இருக்கிறது! இருக்கிறது! ஆனாலும், நாம் ஆயுதப் புரட்சியை விரும்பவில்லை. ஏனெனில், நமக்கு வன்முறையில் நம்பிக்கையே கிடையாது. ‘அன்பே சிவம்’, ‘அமைதியே சத்தி’, ‘அழகே முருகன்’, ‘கனிவே கடவுள்’ என்பதே இந்துமதம்.

நண்ப! பொதுநல விரோதிகளுக்கும், துரோகிகளுக்கும் துப்பாக்கித் தோட்டாக்களால் பதில் சொல்ல வேண்டியதில்லை. ஏனெனில், நம் நாட்டில் குடியாட்சித் தத்துவ அரசு இருக்கிறது. ஆனால், பொதுமக்கள் தங்கள் வாக்குரிமைச் சீட்டுக்களால் பொதுநல விரோதிகளுக்கும் துரோகிகளுக்கும் பதில் சொல்லலாம். ஆனால், யார் ஆட்சிபீடம் ஏறினாலும் அவர்களை சுரண்டல்கார முதலாளிகளும், கள்ளச் சந்தைக்கார

வணிகர்களும், பாட்டாளிகளின் குருதியைக் குடிக்கும் வட்டிக் கடைக்காரர்களும், ஏழைகளை மென்று தின்று வாழும் குட்டி வணிகர்களும் மிக விரைவில் குள்ளநரிப் போக்கால் ஆட்சியைத் தங்களுக்கு சாதகமாக ஆக்கிக்கொண்டு விடுகின்றார்கள். எனவே, இந்த சமுதாய நல விரோதிகளின் குரல்வளையை நெறித்தே ஆக வேண்டியிருக்கிறது. அல்லது, இந்த சமுதாய நல விரோதிகளின் குரல்வளையை மட்டுமின்றி கைகளையும், கால்களையும் முறித்தேயாக வேண்டியிருக்கின்றது. அந்த வன்முறைப் பொறுப்பை இப் பொன்னாட்டின் பொதுமக்கள் பொறுமையிழக்கும் போதே ஏற்றிடுவார்கள். அதன்பிறகே இந்நாட்டின் அடித்தளத்தில் மக்கள் கிளர்ந்தெழுந்து புரட்சி செய்திடுவார்கள். அப்படியொரு மாபெரும் கடுமைமிகு கொடூரப் புரட்சியை செய்வதை முன்கூட்டியே தவிர்த்திடவும், தடுத்திடவும் முயலுகின்ற அமைதிவழிப் புரட்சியாளர்களே நாம். எனவேதான், ‘மயிலே! மயிலே! இறகு போடு’ என்று கேட்காமல் மயில் ஆடுகின்ற காடுகளுக்கு சென்று உதிர்ந்து கிடக்கின்ற மயில் தோகைகளை சேகரித்துக் கொண்டு வருகின்ற பணியினை செய்கின்றோம் நாம்.

இதனை சற்று வெளிப்படையாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைய இந்தியத் துணைக் கண்டம் **‘சமுதாயப் புரட்சி’** என்கின்ற குழந்தையை ஈன்றெடுக்க பிரசவ வேதனைப் பட்டுக் கொண்டிருக்கின்றது. நாமோ அந்தப் பிரசவத்தை நல்லபடியாக நடத்தி முடித்திட வந்திருக்கும் மருத்துவர்களாவோம். எனவே, நாம் பிரசவ வேதனைக்கேற்ப குழந்தை அறுவை மறுத்துவத்தால்தான் பிறக்க வேண்டுமா? (Through Surgical delivery), குழந்தையை இயற்கையாகவே பிறக்க விடலாமா? (Natural Delivery) என்று முடிவெடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அதாவது, நாம் எடுக்கின்ற முடிவுதான் அந்தப் பிரசவ வேதனைக்கு முடிவைத் தரும்.

நண்ப! இந்தியத் துணைக் கண்டம் சமுதாயப் புரட்சிக்காக பிரசவ வேதனைப்படுவது போல் அரசியல் புரட்சிக்காக எள்முனையளவு கூட வேதனைப்படத் தேவையில்லை. ஏனென்றால், சமுதாயப் புரட்சி என்கின்ற குழந்தை பிறந்து விட்டால் அந்த குழந்தைக்காக பெற்றோர்கள் விளையாட்டுப் பொருள்கள் வாங்கித் தருவது போல் பொதுமக்களே தொழில் புரட்சி,

பொருளாதாரப் புரட்சி, அரசியல் புரட்சி முதலியவைகளை தன்முனைப்பாக உருவாக்கிடுவார்கள். இதற்காகத்தான் நாம் நமது மக்களுக்கு 'மொழி வரலாறு', 'இலக்கிய வரலாறு', 'சமய வரலாறு', 'இன வரலாறு', 'பண்பாட்டு வரலாறு', 'கலை வரலாறு', 'சமுதாய வரலாறு', 'அரசியல் வரலாறு' ... முதலிய பல வரலாறுகளை காலக் கணக்கீட்டு அடிப்படையில் மிகமிகத் தெளிவாக, விளக்கமாக, நேரடியாக, அறிவிக்கவும் கற்றுக் கொடுக்கவும் முற்படுகின்றோம்.

இதற்காகவே நாம் அருளாதாரத்தையும், பொருளாதாரத்தையும் அடிப்படையாகக் கொண்டு சமய, சமுதாய, கலை, இலக்கிய, பண்பாட்டு, தத்துவ ... பணிகளை விரிவாக்கி வருகின்றோம். இதனை யாம் அண்மைக் காலமாக உள்நாட்டு, வெளிநாட்டு அருளாளர்களின் ஒத்துழைப்போடு உருவாக்கி அறிவித்து வரும் 'அருட்பணி விரிவாக்க மடல்கள், முடங்கல்கள், அஞ்சல்கள், திருவோலைகள், திருவாணைகள், குருவாணைகள், ... முதலியன விளக்குகின்றன. இவற்றின், செயல்வடிவங்களே நமது சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், சித்தர்நெறி ஆர்வலர்கள், ஆதரவாளர்கள், ... முதலியவர்கள்; சமயம், சமுதாயம், அறிவியல், மொழி, கலை, இலக்கியம், தத்துவம் முதலியவற்றின் பெயரால் தோற்றுவிக்கின்ற மன்றங்கள், குழுக்கள், கழகங்கள், சபைகள், சங்கங்கள், அவைகள், இயக்கங்கள், ... முதலியன.

எனவே, இந்த அமைப்புக்களின் மூலம் கலந்துரையாடல்களையும் (Discussions), உரையாடல்களையும் (Conversations), சொற்போர்களையும் அல்லது பேச்சுப் போட்டிகளையும் (Debates), சொற்பொழிவுகளையும் (Orations and Speeches) வளர்க்க வேண்டும். அவைதான், புரட்சிச் சிந்தனைகளை கருவாக்கி உருவாக்கி வளர்த்து **கருத்துப் புரட்சியை** (Revolution in Idealogy) தோற்றுவிக்கும்; அதன்பிறகே **எண்ணப் புரட்சியை** (Revolution of thoughts or ideas or policies or principles) மலரச் செய்திடும்.

நண்ப! நமது நாட்டில் உண்மையான ஆர்வத்தோடும் உழைப்போடும் கல்வி கற்றுத் தேர்ந்தவர்கள் மிகமிகக் குறைவு. ஏனெனில், ஆரம்பக் காலத்திலிருந்தே கல்வி காசு கொடுத்து விலைக்கு வாங்கும் கடைச்

சரக்காகவே இருந்து வந்திருக்கின்றது. இத் திருநாட்டில் இன்றுகூட இலவசக் கல்வி (Free Education), மலிவுவிலைக் கல்வி (Cheap Education or Education at cheap cost or expense), விலையுயர்ந்த கல்வி அல்லது அதிக விலைக் கல்வி (Education at high expense or costly education) என்று மூன்று வகை விலைக்குக் கல்வி கிடைக்கிறது.

இதைவிட கொடுமை அரசாங்கமே உதவித் தொகையும் (Scholarships), கடனும் (Loan) கொடுத்துப் படிக்கச் சொல்லும் அலுவல் உத்தரவாதமுள்ள கல்வியாக 'தொழிற்கல்வி' (Professional Courses) ஒன்றும்; ஏனோதானோவென்று பெயரளவில் சிறுதொகை தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு மட்டுமே உதவித் தொகையாக வழங்கப்பட்டு கடன் மறுக்கப்பட்டுப் படிக்கச் சொல்லும் 'அலுவல் உத்தரவாதமற்ற' கல்வியாக 'அறிவியல் கலைக் கல்வி' (The Study of Art and Science has no Scholarships and loan; except the community scholarships; that too only for a very selected people with a small amount and the government itself openly declares that there is no security of job by its treatments and trends towards the Art and Science students.) ஒன்றும் இருக்கின்றது.

இந்த நிலையில் வாழ்க்கைக்குப் பொருளீட்டப் பயனற்ற கல்வியைக் (This education is not useful to earn money) கற்ற இளைஞர்கள் வேலையில்லாத் திண்டாட்டம் (Unemployment Programme) என்னும் நெருப்பில் வெந்து காலப்போக்கில் கருகிச் சாம்பலாகி விடும் அவலநிலைதான் மிஞ்சுகின்றது. இன்னும் சொல்லப் போனால் இந்த கலை, அறிவியல் கல்வி கோழைகளையும், வாழ்க்கையைத் துணிந்து நடத்த முடியாத அப்பாவிகளையுமே உருவாக்கும் தன்மை பெற்றதாக இருக்கிறது. ஆனால், இதை நம்பித்தான் இன்றைய இளைஞர்கள் வகைவகையாக உடுத்தி, வாய்நிறைய சிரித்து வாலிபப் பருவத்தை வதைத்துக் கற்று வருகின்றனர். அதாவது, பலியாடு தன்னை வெட்டப் போகும் பூசாறியை நம்பி விடுவதுபோல் தங்களின் வாழ்க்கையைப் பற்றுக் குறையாலும், அடிமைத்தன்மையாலும், சலிப்பான எழுத்தர் பணியாலும் வீணாக்கிடப் போகும் இன்றையக் கல்வியை இந்நாட்டின் இளைஞர்கள் நம்பிடுகின்றார்கள்.

இனி இந்த நாடு எப்படி உருப்படப் போகின்றது? எப்போது உருப்படப் போகிறது? ...

மாணவ நண்ப! "... இந்த நாட்டில் உண்மையிலேயே சிறைச்சாலைகள் எவை? என்று கேட்டால் கல்விக் கூடங்கள்தான் உண்மையான சிறைச்சாலைகள் என்று துணிவுள்ளவர்கள் கூறிடுவார்கள். இன்னும் சொல்லப் போனால் இந்த நாட்டின் வருங்காலத்தை பாழாக்குவதும், இன்றைய இளைஞர் சமுதாயத்தைச் சீரழிப்பதும் சூதாடுமிடங்களோ! குதிரைப் பந்தய அரங்கங்களோ! கலைநிகழ்ச்சிகளோ! விலைமாதர்களோ! ... அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல! உண்மையில் இந்த நாட்டைச் சீரழித்து இழிவுக்கும் பழிக்கும் குறைவுக்கும் கறைக்கும் அனைத்துவிதமான கேடுகளுக்கும் உரியதாக்குவது இந்த நாட்டின் கல்விதான். இந்த நாட்டின் கல்வி இந்நாட்டு மக்களைச் சிறுகச் சிறுக கொலை செய்து வரும் கொடிய நஞ்சு.

(... The Education of this nation is the most dangerous poison which will torture and kill slowly little by little. There is no other social evils except the education of this nation to spoil and to end the future generation. This education is meant for training the chained dogs to be cowardish.. And it is really a open plot against this nation that this education is only powerful capable in creating silly-minded and scrupulous, scoundrels, idiots, hypocrites, thieves and murderers. So, nothing can be done to safe-guard the future except abolishing the present education system ..." - *taken from the writings of my father Mr M Palanisamy Pillai*)#

இந்த நாட்டைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்குவதற்கு இந்த நாட்டின் கல்வியை விட வேறு ஒன்றும் தேவையில்லை. இந்த நாட்டின் கல்வி கட்டிப் போட்டிருக்கும் நாயை அடித்துப் பழக்குவது போன்றதோர் திட்டமேயாகும். இந்த நாட்டுக் கல்வி வெளிப்படையாக தீட்டப்பட்டு செயலாக்கப் படும் ஒரு மாபெரும் சதித் திட்டம் ஆகும். ஏனெனில், இந்த நாட்டுக் கல்வி அற்பப் புத்திப் படைத்த ஒழுக்கமற்ற அயோக்கியர்கள், முட்டாள்கள், ஏமாற்று எத்தர்கள், திருடர்கள், கொலைகாரர்கள், ...

முதலியவர்களை உருவாக்குவதில் பேராற்றலுடையது. எனவே, வருங்காலத்தை காப்பாற்ற வேண்டுமேயானால் உடனே இந்தக் கல்வியை ஒழிப்பதுதான் வழி.....!!"#

இளைஞனே! ஆசைச் செல்வனே! #இக்குறியிட்ட கருத்துக்கள் என் தந்தையினுடையவை. என்னை என் தந்தை உருவாக்கியது போல் உங்களை யெல்லாம் உருவாக்க வேண்டும் என்பதற்காகத்தான் எனது தந்தையின் கருத்துக்களை ஒளிவுமறைவோ! கூடல் குறைவோ ... இல்லாமல் அப்படியே இங்கு குறித்திருக்கிறேன். இதனால், நான் இக் கருத்துக்களை ஒப்புக் கொள்கிறேன் என்று கருதக் கூடாது. என் தந்தை நாத்திகராக (Atheist), பொதுவுடமையாளராக (Communist) இருந்தும் பரம்பரையாக வரக்கூடிய சமயக் கலைகளையும், அறிவியல் கலைகளையும், தத்துவங்களையும், மரபுகளையும், பழக்க வழக்கங்களையும், கொள்கைகளையும் ... (Religious Arts, Sciences, Philosophy, Traditions, Customs and Manners, Faiths...) பிற சமயச் செய்திகளையும் ... (The Religious Information) ஒளிவு மறைவோ! கூடுதல் குறைப்போ ... இல்லாமல் எனக்குச் சொன்னர் என்பதால்தான் நானும் அவருடைய கருத்துக்களை அப்படியே வெளியிட்டு வருகிறேன்.

மேலும், என் தந்தை அடிக்கடி "... நீ நேர்மையுடன் உனது கருத்துக்களை உன்னுடையவை என்று தெளிவாக வெளியிட வேண்டும். இல்லாவிட்டால் காலப் போக்கில் பல சிக்கல்கள் உருவாகி விடும். என்னுடைய ஏட்டறிவு, பட்டறிவு, விருப்பு, வெறுப்பு, ... முதலியவைதான் எனது கருத்துக்களை ஈன்றெடுக்கின்றன. எனவே, இவை இரண்டையும் ஒருவருடையவை என்று கூறுவதால் பல குழப்பங்களும், பொய்மைகளும், கற்பனைகளும், கருத்துச் சிதைவும், சீரழிவும் ... உண்டாகி விடும் ..." என்று கூறுவார். எனவேதான், நான் பேசும் போதும் எழுதும் போதும் அடிக்கடி என் தந்தையின் கருத்துக்கள் மிகக் கடுமையான கொச்சையான பச்சையான விமர்சனங்களாகவே இருக்கும். அதனால், அவை எளிதில் பிறரைப் புண்படுத்தும். இப் போக்கினை நான் ஏற்றுக் கொள்வதேயில்லை. பிறரைப் புண்படுத்தாமல் மிகமிக மென்மையாக, கனிவாக, இனிமையாக, அன்பாகக் கருத்துக்களை வெளியிட வேண்டும் என்பதே என் கொள்கை.

நண்ப! "... நமது நாட்டு நடப்பில் இந்திய விடுதலை இயக்க வளர்ச்சி காலத்திலிருந்து இன்றுவரை சமய - சமுதாய - அரசியல் - கலைத் துறைத் தலைவர்கள் அனைவருமே முறையாக கல்வி கற்காதவர்கள்தான். அப்படியே ஒரு சிலர் கற்றவராக இருந்தாலும் அவர்கள் வெளிநாடுகளில் பட்டம் பெற்றவராகவே உள்ளனர். இவற்றை யெல்லாம் உன்னிப்பாக ஆராய்ந்தால் இந்த நாட்டின் கல்வித் துறை நல்ல அடிமைகளை, வாயில்லாப் பூச்சிகளை, கூண்டுப் பறவைகளை, பட்டி போட்ட வண்டியிழுக்கும் குதிரைகளை, ஒரே இடத்தில் சுற்றிச் சுற்றி வரும் செக்கு மாடுகளை, நின்று நின்று வண்டியிழுக்கும் ஊராட்சி குப்பைவண்டி மாடுகளை, கண்டபடி திரிந்து காகிதம் தின்று பொதி சுமக்கும் கழுதைகளை, நாற்றமடிக்கும் சாக்கடையை நறுமணமிக்க பஞ்சணையாக கருதிப் படுத்துப் புரண்டு வாழும் பன்றிகளை, வாசலில் சங்கிலியால் கட்டப்பட்டு வருவோர் போவோரைக் குரைக்கும் நாய்களை, எச்சிலை கூடக் கிடைக்காமல் சொறி பிடித்துத் திரியும் எலும்புருக்கி நோய் பிடித்த நாய்களை உருவாக்குவதில்தான் பெறற்கரிய பெரிய வெற்றியைப் பெற்று வருகின்றது ....." என் தந்தையின் எழுத்துக் குவியல்களிலிருந்து எடுக்கப்பட்ட கருத்து.

இதனை நான் அப்படியே ஏற்றுக் கொள்ள இயலவில்லை. இருந்தாலும், இப்படிப்பட்ட கருத்தை எடுத்துக் கூறுவதன் மூலம் என் கருத்தை ஓரளவாவது விளக்க முடிகின்றது என்னால் ... என்ற கருத்தையே என்னால் கூறிக் கொள்ள முடிகின்றது. இத் திருநாட்டின் அவலங்களையும், கேவலங்களையும், ஆதிக்க வெறியாட்டங்களையும், ஊழல்களையும், சுரண்டல்களையும், கள்ளச் சந்தைகளையும், கொள்ளை இலாபப் போக்குகளையும், அரசியல்வாதிகளின் பித்தலாட்டங்களையும், விழாக்கள் கொண்டாடி வீண் பொழுது போக்கும் அயோக்கியத் தலைவர்களையும் நினைக்க நினைக்க குமுறும் எரிமலையாக இன்னும் எவ்வளவு காலம் இருப்பது? ... உடனே வெடித்து நெருப்பாறு ஓடச் செய்யும் எரிமலையாக மாறிட வேண்டும் ... என்ற துடிதுடிப்பே ஏற்படுகின்றது. ... எனவேதான் நான் என்னைக் கண்டே அச்சப்பட்டு ஆழ்கடல் முத்தாகி, அடர்காட்டு மலராக, மலைக்காட்டுச் சந்தனமாக வாழுகின்றேன், வாழ முற்படுகின்றேன்.

நண்ப! விடுதலை பெற்ற இந்தியாவில் விடுதலைப் போராட்டக் காலத்தில்

விளம்பரம் பெற்ற பெரியவர்களின் வாரிசுகளே எல்லாத் தலைமைகளையும், உரிமைகளையும், பெருமைகளையும், வசதி வாய்ப்புக்களையும் துய்க்க வேண்டுமென்று துடிதுடிப்பால் பெரும் புயல் அடிக்கின்றது. இப்புயலில் ஏற்படும் பெரிய பெரிய இழப்புகளில், இடிபாடுகளில், சிதைவுகளில், அழிவுகளில், ... கிடைப்பதைத் தேடிப் பெற்று வாழ்வு நடத்துகிறார்கள். புரட்சி மேதை ‘கார்ல் மார்க்சி’ன் பெயரைச் சொல்லுபவர்கள் இந்த நாட்டில் என்றைக்குமே சமத்துவம் வந்து விடாமல் பாதுகாக்கவே உயர்ந்த சாதிக் காரர்களும், பணக்காரர்களும் கம்யூனிச இயக்கத்தைத் தங்களின் கைப்பிடிக்குள்ளேயே வைத்திருக்கிறார்கள். பரம்பரை முதலாளிகள் மதம், கலை, இலக்கியம் முதலியவற்றின் பெயரால் மக்களை பகற்கனவு காண்பவர்களாகவும், கானல்நீரை நோக்கி ஓடும் மான்களாகவும், பழமைப்பற்றும் பிற்போக்குத் தன்மையும், மூடநம்பிக்கையும் உடையவர்களாகவும் ஆக்கி வருகிறார்கள்.

எனவேதான், இந்துமதத்தின் தாயான சித்தர் நெறியின் (The Siddharism is the Mother of the ‘Induism’) மூலம் அறிவியல் பூர்வமான சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியக் கொள்கைகளைப் பரப்பும் பணியை விரைவு படுத்தவும், விரிவு படுத்தவும் முற்படுகின்றேன் நான். பதினெண்சித்தர்களும், மற்ற சித்தர்களும் உருவாக்கிய இந்துமதம் ஒன்றுதான் எல்லா மடமைகளையும், மூடத்தன்மைகளையும், அறியாமைகளையும், அநீதிகளையும், சமுதாய நல விரோதங்களையும், சமுதாய நலத் துரோகங்களையும், ஆதிக்க வெறியர்களையும், தீண்டாமைக் கொடுமைகளையும், பொருளாதார ஏற்றத் தாழ்வுத் துன்பங்களையும், வறுமைக் கொடுமைகளையும், சுரண்டல் கொள்ளைகளையும், ... நேரடியாகக் கண்டிக்கிறது. தண்டிக்க ஆணையிடுகிறது.

(Only the Siddharism condemns all the social evils and atrocities; and it practises to punish the unruly, enimitous, treacherous bad-elements of the society on the whole.... That is why we proudly profess that only the renaissance of the ‘Induism’ can put an end to all social evils and unwanted scrupulous, mischievous bad elements. So, we believe that the “Revolution

through Religion" is the medicine to cure all the social and political diseases .... On account of this we call for the 'total rise of the commons to carry out the Radical Reformations and drastic changes in all steps ... such that a complete cultural revolution to come forward to administrate and to undertake all.)

அதனால்தான், நாம் பூரிப்போடும் பெருமிதத்தோடும் இந்துமத மறுமலர்ச்சி ஒன்றினால்தான் இந்தியாவில் உள்ள அனைத்துத் தீய சத்திகளையும் அகற்ற முடியும் என்று கூறுகிறோம். ஆகவே, 'மதவழிப் புரட்சி'தான் இந்நாட்டின் சமய, சமுதாய, அரசியல் ... துறைகளில் உள்ள நோய்களை நலப்படுத்தும் சிறந்த மருந்து. எனவே, இந்நாட்டுப் பொதுமக்கள் பெருந்திரளினராய்க் கிளர்ந்தெழுந்து, 'பண்பாட்டுப் புரட்சி'யை முழுமையாகச் செய்து முடித்தால்தான் எல்லாவற்றின் ஆட்சியும், செயலாற்றும் திறமும் நல்ல தரத்தைப் பெற்றிடும். ... என்று கூறுகிறோம் நாம்.

நண்ப! 'வயிற்றுப் பிழைப்புக்காக வாத்தியார் வேலை பார்ப்பவர்கள்' என்ற கெட்ட பெயர் ஆசிரியர் சமூகத்துக்கு இருக்கக் கூடாது. வழக்குரைஞர்கள் அரசியல் பேசலாம், தேர்தலில் ஈடுபடலாம் என்று இருப்பது போல், ஆசிரியர்கள் அரசியல் பேசலாம், தேர்தலில் ஈடுபடலாம், அரசியலில் பதவி வகிக்கும் காலம் ஊதிய உயர்வுக்குரிய விடுமுறையாக ஒப்புக் கொள்ளப் படும் ... என்று உடனடியாகச் சட்டத் திருத்தம் கொணர வேண்டும். அப்பொழுதுதான் கல்விச் சாலைகள் அறிவுச்சோலைகளாக, ஆராய்ச்சிக் கூடங்களாக, சமுதாய நல மன்றங்களாக, பகுத்தறிவுப் பாசறைகளாக, பண்பாட்டு ஆலயங்களாக, கருத்தரங்குகளாக, அரசியல் மாமன்றங்களாக, கலைக் கருவூலங்களாக, வீரத்தின் விளைநிலங்களாக, விஞ்ஞானத்தின் நாற்றங்காலாக, புதுமைப் போர்முனைகளாக, சீர்திருத்தப் பயிற்சிக் கூடங்களாக ... ஆகிடும். அப்பொழுதுதான் இந்நாட்டின் கல்வி 'உண்மையான கல்வி'யாக (True Education) ஆகிடும்.

அதற்குப் பிறகுதான் பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளின் கல்வி பற்றி முடிவெடுக்கும் நிலை மாறிக் குழந்தைகளே தங்களின் கல்வி பற்றி முடிவெடுக்கும் நிலை உருவாகிடும். (Only in the True Educa-tional system the students, youngsters or the children will take

decision about their educational field instead of their parents.) அதன்பிறகு இந்நாட்டின் கல்வி முதலாளித்துவக் கல்வியாக (The education of the capitalists; that is to say, the present system of education only favours, supports, helps and useful to the capitalists. And it cultivates the mind to accept and admit the capitalistic set-up of society and polity. ... But when the true education prevails nobody will tolerate the swindling, cheating, rise of prices, monopolies and dictatorship of the capitalists. This is to say the younger generation will not be ready to serve under the capitalists.) இருக்காது. இன்றைய கல்வி கற்கும் இளைஞர்கள் முதலாளிகளிடம் அடிமைகளாக வேலை பார்க்கத் தயாராக இருப்பதுபோல்; வருங்காலத்தில் இளைஞர்கள் முதலாளிகளிடம் வேலை பார்க்கத் தயாராக இருக்கவே மாட்டார்கள். இன்னும் சொல்லப் போனால், வருங்கால இளைஞர்கள் அடிமைவாழ்வு என்ற முறையையே முற்றிலும் அகற்றிடுவர்.

நண்ப! இன்றைய எல்லாத் துறைத் தலைவர்களும் தங்களுடைய புகழ், சொத்து, செல்வாக்கு, ... முதலியவைகளை என்றென்றும் நிலையாகக் காத்துக் கொள்ள விரும்பும் தன்னல வெறியர்களாகவே இருக்கின்றனர்கள். எனவேதான், இவர்கள் பழமைப்பற்று (conservatism) மிக்கவர்களாக மாறிக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால், நம் போன்ற மதத் துறையினர், '... மதத்தால்தான் பழமையும், மடமையும், மூடநம்பிக்கையும், அறியாமையும், அடிமைப்பண்பும், சுரண்டலும், முதலாளித்துவ ஆதிக்க நிலையும், ஆதிக்கத் துறையாரின் அடக்கு முறையும், ஏமாற்றும், சாதிவெறியும், தீண்டாமையும் ... மிகுந்திருக்கின்றன. தனிமனிதச் சர்வாதிகாரமும், மேலாண்மையும், சூழ்ச்சியாட்சிகளும் ... மதத்தால் உரமிட்டு வளர்க்கப் படுகின்றன...' என்ற பழி மதத்துக்கு ஏற்படுத்தப் பட்டிருப்பதை முற்றிலும் மாற்றும் முயற்சியில் ஈடுபட்டேயாக வேண்டும். அதற்காகவே நாம் மிக முனைப்போடு, '... இந்துமதத்தில்தான் மிகச் சிறந்த முற்போக்குக் கொள்கைகள், பகுத்தறிவுப் போக்குகள் (Rationalistic Attitudes), அறிவியல் அணுகு முறைகள் (The Radicalism), முழுமையான புரட்சித் திட்டத் தத்துவம் ... முதலியவை இருக்கின்றன...' என்ற பேருண்மையினைப் பேச்சாலும், எழுத்தாலும், செயலாலும் வெளியிட்டு வருகிறோம்.

இன்னும் சொல்லப் போனால், நாம், நமது அருட்பணி விரிவாக்கத் திட்டங்களின் மூலமே 'இந்துமதம் அன்றாட வாழ்வின் தேவைகளையும், சிக்கல்களையும் தீர்த்து வைக்கக் கூடிய மிகச் சிறந்த சாதனம்' என்பதை விளக்குகின்றோம். (We exhibit, explain and establish that the 'INDUISM' is the best means to solve all sorts of daily problems of an individual and social life. Our demonstrations of divinising the selected people and curing the disease by mystical treatments or aids are the true proves and evidences to make the people to understand the essential need of the Religion 'The Induism' for mankind.) மேலும், நாம் தனிமனிதர்களைக் கடவுட் தன்மை பெறுமாறு செய்வதாலும், பல நோய்களுக்குத் தெய்வீக மருத்துவ முறையில் நலமளிப்பதாலும், மானுட வாழ்வுக்கு 'இந்துமதம்' இன்றியமையாதது என்ற பேருண்மை விளக்கப் படுகின்றது.

இதனால், அறிவுத் துறையோர், கலைத்துறையோர், அலுவலகப் பாட்டாளிகள், வாணிப வட்டாரத்தார், தொழில் வட்டாரத்தார், மூதாதையர், சொத்துக்களால் சுகவாழ்வு வாழும் சொத்து படைத்த வர்க்கத்தார், ... முதலியோர் ... 'மீண்டும் இந்துமதத்தின் மூலம் இந்நாட்டில் சமுதாயமும், அரசியலும் பிற்போக்கு நிலைக்குத் தள்ளப்படும் ..." என்று எண்ணி மகிழ்ந்து நமக்கு உதவ ஓடோடி வருகிறார்கள். அவர்களை ஆரம்பத்திலேயே எச்சரிக்கை செய்வதற்காகத்தான்; நான் நூறு, ஆயிரம் ... என்று இந்துமதத்தின் உண்மையான தத்துவ, சித்தாந்த, மறையாந்த, போதாந்த, ... நிலைகளை விளக்கும் அஞ்சல்களையும், கட்டுரைகளையும் எழுதிக் குவிக்கின்றேன். அவற்றை உங்களைப் போன்றோர் கையெழுத்துப் (பிரதி) நகல்களாகத் தயாரித்தே நாடெங்கும் அனுப்புகிறீர்கள். இன்னும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை எனது படைப்புக்கள் அச்சாகிடாமல், 'கையெழுத்து நூல்களாகவே' (Manuscript Books) எங்கும் பரவி கொள்கைகளை விளக்குவதுதான் நல்லது.

நண்ப! இன்றைக்குத் திரைப்படம், நாடகம், பத்திரிகை, புத்தகம், பிற கலைகள் முதலியவற்றின் மூலம் இன்றைய ஆளும் வர்க்கமும், முதலாளிகளும், சமுதாய மேட்டுக்குடி மக்களும் எப்படியாவது பிற்போக்குச்

சத்திகளையும், செயல்நிலைகளையும், வாழும் வடிவமைப்புக்களையும் அப்படியே பாதுகாத்திடல் வேண்டும் என்ற பெருமுயற்சியில் ஈடுபட்டுள்ளன. அதற்காகவே விளையாட்டு விழாக்கள், பெரியார்கள், கவிஞர்கள், கலைஞர்கள், அரசியல் தலைவர்கள், ... முதலியோர்களின் பிறந்த, இறந்த நாள் விழாக்கள், போராட்டங்கள், புதிய இயக்கங்கள், ... என்று பல திசை திருப்பும் முயற்சிகள் தொடர்ந்து அரசியல்வாதிகளாலும், முதலாளிகளாலும் செய்யப்பட்டு வருகின்றன.

இச்செயல்களால் இளைஞர்கள், ‘தேன்குடித்த நரிகள்’, ‘கள் குடித்த குரங்குகள்’, ‘மகுடி கேட்ட நாகங்கள்’, ‘மழைத் தூறலைத் துய்த்த மான்குட்டிகள்’, ... போல் உணர்வு வயப்பட்டு வீணாகிடுகின்றார்கள். இப்பேரழிவை, பேரிழிவை, ... உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டுமேயானால்; ‘இந்து மதத்தைச் சாதனமாகப் பயன்படுத்துவதுதான் சிறந்த வழி’ என்ற முடிவுக்கு வரவேண்டும். அதைத்தான், ‘மதவழிப் புரட்சியே இந்தியாவைக் காப்பாற்றும்’ என்று இருநூறு ஆண்டுகளாக இந்து மறுமலர்ச்சி இயக்கம் கூறிவருகிறது.

ஆனால், இந்த இயக்கமே இருட்டறைப் பொருளாக, ஆழ்கடல் முத்தாக, அடர்காட்டு மலராகத்தான் இருந்து வந்திருக்கிறது. இனியும் அது கூடாது என்பதற்காகத்தான் நாமெல்லாம் மிகப்பெரிய தியாகங்களைச் செய்து தீரத்தோடும், வீரத்தோடும், உரத்தோடும், தரத்தோடும், ... உழைக்கப் புறப்பட்டிருக்கிறோம். ... நமக்குப் புகழோ, பொருளோ, பதவியோ, ... தேவையில்லை. நாம் விரும்புவது ‘சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாயம்’ அமைப்பதுதான். இதற்காகத்தான் நான் மிகமிகத் துணிவோடும்; தெளிவோடும் எனக்குச் சரியென்று தோன்றிய கொள்கையை என்னோடு தொடர்பு கொள்ளும் அனைவரிடமும் விளக்கி வருகிறேன்.

நான் வெறும் திட்டங்களை மட்டும் தாளில் தீட்டிக் கொண்டிருக்க வில்லை. என் கொள்கையையும், குறிக்கோள்களையும் செயலாக்கக் கூடிய ஓர் ஒப்புயர்வற்ற, பேராற்றல்மிக்க, ஒற்றுமையில் சிறந்த இளைஞர் கூட்டம் ஒன்றை வளர்த்து விரிவாக்கி வளப்படுத்திக் கொண்டே வருகின்றேன். என்னுடைய முயற்சிகள் வெறும் பேச்சாகக் காற்றில்

கரைந்து விடாமல் ஆயிரக் கணக்கான கட்டுரைகளையும், நூறுயிரக் கணக்கான அஞ்சல்களையும், நூற்றுக் கணக்கான நூல்களையும் வடிவமைப்போடு உருவாக்கி விட்டேன். இவற்றிற்கு நாட்டின் பல்வேறு மூலைகளில் படிப்போரும் உருவாகி விட்டனர்.

இனி விரைவில், கோவில்கள் தோறும், ‘சித்தர் நெறி’, ‘இந்துமதம்’, ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’, ‘கடவுளை வழிபடுவோர் கழகம்’, ‘இந்தியப் பண்பாட்டுக் கழகம்’, ‘இந்தியத் தெய்வீகத் திருச்சபை’, ‘இந்தியக் கலைக்கழகம்’, ‘இந்தியா அருளாளர் மாமன்றம்’, ‘இந்திய மத நம்பிக்கையாளர் திருச்சபை’, ‘இந்தியச் சமுதாயநலப் பெருமன்றம்’, ‘இந்தியச் சமய ஆராய்ச்சிக் கழகம்’, ‘உலகமத ஆய்வுக் குழு’, ‘சித்தர்நெறிக் கழகம்’, ‘சித்தர் நெறி இயக்கம்’, ‘திராவிடப் பண்பாட்டு ஆய்வுக் கழகம்’, ‘திராவிட மொழி ஆய்வுக் கழகம்’, ‘தமிழ்மொழி வளர்ச்சிக் கழகம்’, ‘தமிழ்ப் பண்பாட்டுக் கழகம்’, ‘உலக ஒற்றுமைக் கழகம்’, ‘உலக மானுடநலக் காப்புக் கழகம்’, ... முதலிய பல அமைப்புக்கள் அமைக்கப்படும் முயற்சிகள் நடக்கும்.

ஒவ்வொரு கோயிலிலும் தனிமனிதர்கள் தங்களின் பழம் பிறப்புக்களையும், மறுபிறப்புக்களையும், சமயப் பேருண்மைகளையும் அரிய, புரிய, உணரப் பயிற்சிகள் வழங்கப் பட்டிடும். அதற்காகச் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் கோவில்களை யெல்லாம் தங்களுடைய பயிற்சிப் பள்ளிகளாக மாற்றிடுவார்கள், எங்கும் ‘ஞானக்கொடி’ வானுயரப் பறந்திடும் .... இவற்றால் நமது இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் ஆழமான நெடிய பெரிய தத்துவ நோக்கங்கள் இன்றைய சமய, சமுதாய, அரசியல், தொழில், கலை, இலக்கியப் பொருளாதார வட்டாரச் சூழல்களுக்கேற்பச் செயல்திட்டங்களாக வடிவமைப்புப் பெற்றுள்ளன. இவற்றைத்தான் நாம் நமது முழக்கங்களாக

“நாடோடி இல்லாமல் செய்க”

“பிச்சைக்காரர்களை இல்லாமல் செய்க”

“முதலாளித்துவச் சுரண்டல் இல்லாமல் செய்க”

“விலைவாசி ஏற்றத்தை இல்லாமல் செய்க”

“கள்ளச் சந்தையை இல்லாமல் செய்க”

“அனைத்துத் தொழில்களையும் அரசுடைமையாக்குக”

"வேலையில்லாத் திண்டாட்டத்தை இல்லாமல் செய்க"

"நடைபாதை ஓரத்தில் வாழும் பாமரப் பாட்டாளிகளை இல்லாமல் செய்க"

"பட்டினி கிடப்போரை இல்லாமல் செய்க"

"அனாதைகளை இல்லாமல் செய்க"

"வறுமையை இல்லாமல் செய்க"

"சிறுவர்கள் உழைக்காமல் கல்வி கற்கச் செய்க"

"அரசியல், கலை, இலக்கியம், சமுதாயம் முதலியவற்றின் பெயரால் அனாவசிய ஆடம்பர விழாக்கள் இல்லாமல் செய்க"

"ஆண்டவன் முன்னால் அனைவரும் சமம் என்பது போல் ஆளுபவர் முன்னால் அனைவரும் சமம் என்று செய்க"

"சமுதாய சமத்துவத்தைச் செயலில் செய்க"

"உழைக்காமல் உண்டு கொழுப்போர் இல்லாமல் செய்க"

"மாணவர் விருப்பாற்றலுக்கேற்ப கல்வி கற்க வசதி செய்க"

"மனம் ஒத்தவர் திருமணம் செய்து வாழ உத்திரவாதம் செய்க"

"சர்வாதிகாரப் போக்குகள் முளைவிடாமல் செய்க"

"சமுதாய நல விரோதச் செயல்களைத் தண்டித்திடுக"

"சமுதாய நலத் துரோகச் செயல்களைக் கண்டித்திடுக"

"ஆட்சியதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்துபவர்களைத் திருத்த, கண்டிக்க, மாற்ற, தடுக்க சட்டப்படி வழிவகைகள் செய்க"

"அனைத்து மக்களின் அமைதிக்கும் நிம்மதிக்கும் நிறைவுக்கும் வழி செய்க"

"உழைக்கும் வர்க்கத்தின் பிழைப்புக்கு உத்திரவாதம் செய்க"

"கல்வியில் உண்மைத் தன்மையை உண்டாக்குக"

"கல்விக்கும் உலகியல் நடைமுறைக்கும் உறவை உண்டாக்குக"

"உடனடியாகக் கல்விக் கூடங்களைப் பொதுவுடமையாக்குக"

"அரசே! புதிய தொழில்களையும், பண்ணைகளையும் தொடங்குக"

"சமுதாயப் புரட்சியையும், அரசியல் புரட்சியையும் ஒரே சமயத்தில் நிறைவேற்றிட ஆவண செய்க"

... இப்படி முழக்குகின்றோம். நாம் புதுமை விரும்பிகள்தான். ஆனால்,

புரட்சி விரும்பிகள் அல்ல. இருப்பினும் புரட்சியால்தான் புதுமைகள் விளைவிக்கப்பட முடியும் என்ற உண்மை வலுப்படுமேயானால் பொதுமக்கள் பெருந்திரளினர் வெகுண்டெழுந்து அப்புரட்சியைச் செய்யுமாறு செய்பவர்களாகவே இருப்போம் நாம். அதனால் நாளைய இளைய தலைமுறை எப்படி யெப்படி புரட்சி செய்ய வேண்டும் என்ற தத்துவ விளக்கத்தை முறையாகவும், முழுமையாகவும் ஏட்டில் எழுதிக் காட்டிச் செல்ல வேண்டிய கடமை இருக்கிறது. இக்கடமையைத்தான் என் தந்தை என்னிடம் அடிக்கடி "... உன்னுடைய ஒவ்வொரு சொல்லும், செயலும், நினைவும், கனவும், 'புரட்சி மயங்கக் கூடாது' என்ற குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்" என்று கூறினார். அவருடைய சொற்கள் என் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன. அதனால்தான், உனக்கு 'அருட்பணி விரிவாக்க மடல்' எழுத உட்கார்ந்த நான் 'புரட்சி மயங்கக் கூடாது' என்று தலைப்பிட்டே கட்டுரை அஞ்சலை எழுதி முடித்துள்ளேன்.

நண்ப! 'புரட்சி மயங்கக் கூடாது' என்ற இந்த அஞ்சல் கட்டுரைக்கு விரைந்து உடனே நகலொற்றித் தாள் (Carbon Paper Copies) நகல்கள் நான்கு தயாரித்து ஒன்றை நமது தலைமைச் செயலகமான வீரமாகாளி சன்னிதானத்துக்கும், மற்றொன்றை சுற்றுப் பயணத்தில் இருக்கும் நமது தாயுமானவர் சன்னிதானத்துக்கும் (வேம்படிதாளம்), இரண்டை எமக்கும் அனுப்புங்கள். கோப்புக்கு ஒரு பேனா நகலும், இயன்றவரை முன்னது போன்ற நகலொற்றித் தாள் நகல்களில் சிலவும் தயாரித்து நேரில் எடுத்து வாருங்கள்.

நமது சித்தரடியார் சோ. இரவீந்திரன் சோழப் பெருமண்டலத் திருவோலக்க நாயகம், ஆத்தாள் முப்புரம் கொண்டருளு தேவி ஆதிபராசத்தி ஆதினம், பதினெண்சித்தர் குருவழி வாரிசு கொண்டருளு குரிசில் அவர்களின் சுற்றுப் பயணத்திற்கு முன்னோடியாக இந்த அஞ்சல் பல இடங்களுக்கும் அனுப்பப்படல் வேண்டும். அதற்காக நண்பர்களையும் நகலெடுக்கும் பணியில் ஈடுபடச் சொல்லுங்கள்.

நண்ப! தாங்கள் நேரில் மதுரைக்குச் செல்லா விட்டாலும்,

மதுரையிலிருந்து ஆலவாய் கொற்றவை சன்னிதானம் இரா.தனசேகரனேயும், தேவதானப்பட்டி காமாட்சியம்மன் சன்னிதானம் வெ.செகதீசனேயும் உடனடியாகத் திருச்சிக்கு வரச் சொல்லி முழுமையாக அறிவுரைகள் கூறி ஆர்வத்தோடு புரட்சிப் பணியில் ஈடுபடச் சொல்லுங்கள். மதுரை வட்டாரத்தில் உருவாக்கிட்ட சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் நெல்லிக்காய் மூட்டை சிதறி நாலாபக்கமும் நெல்லிக்காய் சிதறி கிடப்பதுபோல் இருக்கிறுர்கள். இந்த நிலேயை உடனடியாகப் பெரும் முயற்சிகள் செய்து மாற்றிச் சீர்திருத்திச் செப்பனிட வேண்டும்.

அத்துடன் முடிந்தவரை, அதாவது வாரம் ஒருமுறையாவது சித்தர்நெறிச் செல்வர்கள் ஒன்றுகூடிக் கொள்கை விளக்கமும், குறிக்கோள் விளக்கமும், செயல்திட்ட விளக்கமும் பற்றிக் கலந்து உரையாடிடல் வேண்டும். அத்துடன் முடிந்தவரை மதுரை மாநகருக்குள்ளேயும், சுற்று வட்டாரத்துக்குள்ளேயும் ‘ஞானக்கொடி’ ஏற்றுதல், அறிவார்ந்த அருளுரை வழங்குதல், இந்து மறுமலர்ச்சி இயக்கக் கிளேகளே ஆரம்பித்தல், தனிமனிதர்களே அருட்செல்வர்களாக ஆக்குதல், கோயில்களுக்குப் புத்துயிர்ப்புச் செய்தல் முதலிய பணிகளேச் செய்வது நிகழ்தல் வேண்டும்.

அப்பொழுதுதான் நாம் சமய எழுச்சியையும், சமுதாயப் புரட்சியையும், அரசியல் மறுமலர்ச்சியையும், கலே வளர்ச்சியையும், உண்மையான பண்பாட்டுப் புரட்சியையும், சமுதாய சமத்துவத்தையும், அரசியல் சமத்துவத்தையும் கருவாக்கி உருவாக்கிடும் பணியைத் துவக்கியவர்கள் ஆவோம். இல்லாவிட்டால் ‘புரட்சி மயங்கக் கூடாது’ என்ற சித்தர் நெறியைச் சிறுகச் சிறுகக் கொன்றவர்கள் ஆவோம். நாம் மதவழிப் புரட்சிக்கு நாட்டைத் தயார் செய்யா விட்டால்; நமது வருங்கால இளேய தலேமுறை தற்கொலேகளேயும், கொலேகளேயுமே நம்பி, விரும்பி, ஏற்றுச் சிறப்பாகச் செயல்பட்டிடும். அத்தகைய மாபெரும் சமுதாய அநீதிகளும், துரோகங்களும், விரோதங்களும், பயங்கரங்களும், அழிவுகளும், இழிவுகளும் ஏற்படாமல் முன்னேற்பாடான செயல்களேச் செய்ய வேண்டியதே நம் கடமை! கடமை! கடமை! இதனே உணராமல் ஏறத்தாழ எல்லா இளேஞர்களுமே சுயநலத்தோடு, குறுகிய கண்ணேட்டத்தோடு, குறுக்கு

**வழிகளில் தங்களுடைய வாழ்க்கையை மட்டும் வளப்படுத்திக் கொள்ள முயற்சிப்பது மடமை! மடமை!! மடமை!!! என்று கூறி இவ்வஞ்சலை முடிக்கின்றேன்.**

**எனவே, நீயும் நமது நண்பர்களும் 'புரட்சி மயங்கக் கூடாது' என்ற கொள்கையையும் குறிக்கோளையும் நிறைவேற்ற எவ்வித மயக்கமும் இல்லாமல் செயல்பட்டிடத் தாத்தாக்களும் ஆத்தாக்களும் அருள் புரிவார்களாகுக! என்று கூறி இவ்வஞ்சலை நிறைவு செய்கின்றேன்.**

ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!

அன்பே சிவம்!

அன்பு/

**'ஞாலகுரு' சித்தர் அரசயோகி கருவூறார்**

29/12/81

*எழுதிக் கையொப்பமிட்டது:* சி. கவிக்குமார்

Total Number of Pages in the original handwritten copy: 25

*அருளுரை வழங்கியவர்:*

**அருள்மிகு, இன்றைய குருமகாசன்னிதானம், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூறார்,**

*பெறுபவர்:*

அருள்மிகு அருட்சேனை இணைத்தளபதி, சித்தர்நெறிக் குரவர், சித்தரடியான் இரா. சண்முகானந்தன், 15 ரூபி விடுதி, ம.பொ.க., திருச்சி-620015

**//உண்மை நகல்//**

**இதன் மூலம்: சித்தரடியார் திரு சி. கவிக்குமாரின் கையெழுத்தில் இருந்தது.**

## பதினெண்சித்தர் மடம், பீடம்

## இந்து மறுமலர்ச்சி இயக்கம்

# இ.ம.இ. நிர்வாகக் கட்டமைப்பு

1. இந்து மறுமலர்ச்சி இயக்கத்(இ.ம.இ.) தலைவர், துணைத் தலைவர், இணைத் தலைவர்.
2. இ.ம.இ. செயலாளர், துணைச் செயலாளர், இணைச் செயலாளர்
3. இ.ம.இ. பொருளாளர், துணைப் பொருளாளர், இணைப் பொருளாளர்
4. இ.ம.இ. அமைப்புத் தலைவர், துணைத் தலைவர், இணைத் தலைவர்
5. இ.ம.இ. அமைப்புச் செயலாளர், துணைச் செயலாளர், இணைச் செயலாளர்
6. இ.ம.இ. அமைப்புப் பொருளாளர், துணைப் பொருளாளர், இணைப் பொருளாளர்
7. இ.ம.இ. சிவசத்தி வாரவழிபாட்டு மன்றத் தலைவர், துணைத் தலைவர், இணைத் தலைவர்
8. இ.ம.இ. சிவசத்தி வார வழிபாட்டு மன்றச் செயலாளர், துணைச் செயலாளர், இணைச் செயலாளர்
9. இ.ம.இ. சிவசத்தி வாரவழிபாட்டு மன்றப் பொருளாளர், துணைப் பொருளாளர், இணைப் பொருளாளர்
10. இ.ம.இ. கொள்கை பரப்புச் செயலாளர், துணைச் செயலாளர், இணைச் செயலாளர்
11. இ.ம.இ. கலை வளவளர்ச்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர், இணைத் தலைவர்
12. இ.ம.இ. கலை வளவளர்ச்சி மன்றச் செயலாளர், துணைச் செயலாளர், இணைச் செயலாளர்
13. இ.ம.இ. கலை வளவளர்ச்சி மன்றப் பொருளாளர், துணைப் பொருளாளர், இணைப் பொருளாளர்
14. இ.ம.இ. இலக்கிய வளவளர்ச்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர், இணைத் தலைவர்.

15. இ.ம.இ. இலக்கிய வளவளர்ச்சி மன்றச் செயலாளர், துணைச் செயலாளர், இணைச் செயலாளர்.

16. இ.ம.இ. இலக்கிய வளவளர்ச்சி மன்றப் பொருளாளர், துணைப் பொருளாளர், இணைப் பொருளாளர்.

17. இ.ம.இ. உடற்பயிற்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர், இணைத் தலைவர்.

18. இ.ம.இ. உடற்பயிற்சி மன்றச் செயலாளர், துணைச் செயலாளர், இணைச் செயலாளர்

19. இ.ம.இ. உடற்பயிற்சி மன்றப் பொருளாளர், துணைப் பொருளாளர், இணைப் பொருளாளர்.

20. **அ**ருட்பணி **வி**ரிவாக்கத் **தி**ட்டத்(அ.வி.தி.) தலைவர், துணைத் தலைவர், இணைத் தலைவர்.

21. அ.வி.தி. செயலாளர், துணைச் செயலாளர், இணைச் செயலாளர்

22. அ.வி.தி. பொருளாளர், துணைப் பொருளாளர், இணைப் பொருளாளர்.

23. அருட்கோட்டக் காப்பாளர், துணைக் காப்பாளர், இணைக் காப்பாளர்

24. தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவர், துணைத் தலைவர், இணைத் தலைவர்.

25. தமிழின மொழி மத விடுதலை இயக்கச் செயலாளர், துணைச் செயலாளர், இணைச் செயலாளர்.

26. தமிழின மொழி மத விடுதலை இயக்கப் பொருளாளர், துணைப் பொருளாளர், இணைப் பொருளாளர்.

27. தமிழின மொழி மத விடுதலை இயக்க அமைப்பாளர், துணை அமைப்பாளர், இணை அமைப்பாளர்.

28. தமிழின மொழி மத விடுதலை இயக்கக் கொள்கை பரப்புச் செயலாளர், துணைச் செயலாளர், இணைச் செயலாளர்.

**... ... மேற்கண்ட 28x3=84 பதவிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் படும் நபர்களிலிருந்து கீழ்க்காணும் பன்னிருவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவர். இவ்வாறு தேர்ந்தெடுக்கப் படும் நபர்களுக்கு மீண்டும் மறு தேர்தலின் மூலம் நியமிக்கப் படுவர்.**

29. நிர்வாகக் குழு தலைவர், துணைத் தலைவர், இணைத் தலைவர்

30. நிர்வாகக் குழு செயலாளர், துணைச் செயலாளர், இணைச் செயலாளர்

31. நிர்வாகக் குழு அமைப்பாளர், துணை அமைப்பாளர், இணை அமைப்பாளர்

32. நிர்வாகக் குழு பொருளாளர், துணைப் பொருளாளர், இணைப் பொருளாளர்.

**ஒவ்வொரு கிராமம் தோறும், வட்டாரம் தோறும் இது போன்று 96 பதவிகளுக்கு 96 நபர்கள் நியமிக்கப் பட வேண்டும். இவ்வாறு அமைக்கப் பட்டு செயல்பட்டதினால்தான் பிற்காலச் சோழப் பேரரசில் சமுதாய மறுமலர்ச்சி ஏற்பட்டது.**

# இ.ம.இ. நிர்வாகக் கட்டமைப்புச் செயற்பணி

1. இயக்கத்தை அறிந்து கொண்டு ஆர்வலராகவோ, சித்தரடியான்களாகவோ இயக்கத்தில் செயல்பட முன் வருகின்றவர்களுக்கு மேற்கண்ட 96 பதவிக்குரிய நிலையறிந்து உடனடியாக ஏதேனும் ஒரு பதவி தர வேண்டும். அதன் மூலம் அனைவரும் நன்முறையில் இயக்கத்தில் முழுமையாக ஈடுபட முடியும். அவர்களில், தங்களுக்கு பதவிக்கேற்பச் செயல்படத் தெரியாது என்று கூறுபவர்களுக்கு; 'நீரில் இறங்கிய பின்புதான் நீச்சல் கற்றுக் கொள்ள முடியும்' என்று எடுத்துக் காட்டி தலைமையோடு இணைந்து செயல்படுமாறு கூற வேண்டும். இப்படிப் பதவியில் நியமிக்கப் பட்டவர்கள் அனைவரும் அவ்வப்போது கூட்டப்படும் கூட்டத்திற்கு வந்து கலந்து கொள்ள வேண்டும். தொடர்ந்து மூன்று கூட்டங்களில் கலந்து கொள்ளாதவர்கள் அப்பதவியினின்றும் நீக்கப் படுவார்கள். கூட்டம் அமாவாசை நாளில் பகலிலோ, முழுநிலவு நாளன்று இரவிலோ அல்லது அமாவாசைக்கும், முழு நிலவு நாளுக்கும் முன்போ பின்போ கூட்டப்பட வேண்டும். இக்குழுவில் பொறுப்பில் உள்ளவர்கள் குறைந்தது ரூ.5/- கட்டணம் தர வேண்டும். இவ்வாறு கூட்டப்படும் ஊரில் உள்ள கோயிலிலோ, பொது இடத்திலோ, ஆற்றங்கரையிலோ, ... தான் கூட்டப்பட வேண்டும். இரகசியமாக எங்கும் கூட்டப்படக் கூடாது. அதாவது, இ.ம.இ.யின் கூட்டம் கூட்டப்படுவது அனைவருக்கும் தெரிய வேண்டும்.

**2. கூட்ட விதி:-**

நமது இயக்கம் அருளாளர் இயக்கம். அருளுலகத்தாரின் இயக்கம். அருளுலக இயக்கம். இதில் எதையும் முடிவு செய்பவர்கள் தாத்தாக்கள் ஆத்தாக்கள் என்பதை அனைவரும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். எனவே, எது குறித்தும் **காரசாரமான** விவாதம் கூடாது. எல்லோருமே தங்களது கருத்துக்களை வெளிப்படையாகக் கூட்டத்தில் பேசலாம். பின்னர் கூட்ட முடிவில் ஒட்டு மொத்தக் கருத்தைத் தொகுத்து எழுதித் தலைமைப் பீடத்திற்கு அனுப்பிட வேண்டும். பிறச்சினைகளுக்கு முடிவுகள் எதுவானாலும், தாத்தாக்கள் ஆத்தாக்கள் கருகுலத்திலிருந்து வழங்கும் முடிவுகள்தான் இறுதியானது. அதை விமரிசிப்பதற்கோ அல்லது மாற்றுவதற்கோ யாருக்கும் அதிகாரம் இல்லை. ஏனெனில், **நாம் விடுதலை இயக்கம்; நாம் அருட்படையாகத் தயாரிக்கப் படுகின்றோம் தாத்தாக்கள் ஆத்தாக்களால்**.

வாராவாரம் கூடுகின்ற கூட்டத்தை உறுப்பினர்களின் விருப்பப்படி (மாதம் இருமுறை அல்லது வாரம் ஒருமுறை கூடலாம்.) ஒவ்வொரு முறையும் கூடும் இடத்தை மாற்ற வேண்டும். அதுதான், இயக்கத்தவரிடையே நல்ல உறவை வளர்க்கும். கூட்டத்தில் கலந்து கொள்பவர்களுக்குக் குறைந்தது **தேநீராவது** வழங்க வேண்டும். அதற்காக, கூட்டம் துவங்கும் சில நாட்களுக்கு முன்னால் ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலித்துக் கொள்ளலாம் உறுப்பினர்களிடமிருந்து. கூட்டம் குறைந்தது ஒரு மணி நேரமாவது நடைபெற வேண்டும். அதற்கு மேல் நீடிக்க வேண்டாம். கூட்டம் முடிந்ததும் அனைவரும் ஒன்றாகச் சென்று ஏதேனும் ஒரு கோயிலில் பூசை, வழிபாடு நிகழ்த்தி விட்டுப் பிரிய வேண்டும்.

3. கூடுமானவரை புதிய புதிய சுற்று வட்டாரக் கிராமங்களுக்குச் செல்ல வேண்டும். நம்மவர்கள் சிலராக இருந்தாலும் வாரம் ஒரு கிராமம் என்று சென்றாவது அங்குள்ள கோயில்களில் (ஏதாவது ஒரு கோயிலிலாவது) சிவபுராணம் பாடி மற்ற காயந்திரி மந்திரங்களையும், புத்துயிர்ப்பு மந்திறங்களையும் கூறி **"அருளாட்சி அமைப்புப் பணி"** துவங்கி விட்டது என்பதைக் கூறிப் பூசை செய்யுங்கள். அங்குள்ள பூசாறி, ஊர்ப் பொதுமக்களிடம் நமது கருத்துக்களையும், வெளியீடுகளையும் வழங்கி விட்டு வரவேண்டும். இதுவே செயல்திட்டம்.

4. அனைத்து மாவட்டங்களிலும் மேற்கூறிய 96 அமைப்புப் பிரிவுகளும் விரைந்து அமைக்கப் பட்டு; 96 உறுப்பினர்களும் வாரம் ஒருமுறை அல்லது மாதம் இருமுறையாவது ஒன்று கூடியாக வேண்டும். இப்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப் பட்டால்தான் மாவட்ட நிர்வாகங்கள் செம்மைப்படும். சில சமயங்களில் ஒரு கிராமத்திலோ அல்லது இரண்டு மூன்று கிராமங்கள் சேர்ந்தோ அல்லது வட்டாரத்திலோ அல்லது வட்டத்திலோ முப்பது நாற்பது பேர்கள் சேர்வார்கள் என்றால் அல்லது சித்தரடியான்களாக இன்றி ஆர்வலராகக் கிடைப்பார்கள் என்றால் இது போன்ற 84 பதவிகளைக் கூறி 28 அமைப்புக்களை நிறுவுங்கள். இந்த 28 அமைப்புக்களை நிர்வகிக்க மேற்காணும் 84 நபர்களிலிருந்து **பன்னிரண்டு பேர்களைத்** தேர்ந்தெடுத்து **நான்கு நிர்வாகக் குழுக்களை** ஏற்படுத்த வேண்டும். மேலும், தேர்ந்தெடுக்கப் பட்ட பன்னிரண்டு பேர்களின் முந்தைய பதவிகளுக்கு புதிதாக பன்னிரண்டு பேர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இவ்வாறாக, ஒவ்வொரு இடத்திலும் இது போன்று 32 அமைப்புக்களை ஏற்படுத்தி **சமுதாய மறுமலர்ச்சி**க்கு அடிகோல வேண்டும். இவ்வாறு 32 அமைப்புக்களை கிராமங்கள் தோறும் ஏற்படுத்தித்தான் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் **அருளாட்சி அமைப்புப் பணி**யைச் செய்தார் என்பதையும் புரிந்து கொள்க! உணர்க!

**ஞாலகுரு சித்தர் கருவூரார்**

**பதினெண்சித்தர் மடம், பீடம், கருகுலம்**

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**

**அருட்பணி விரிவாக்கத் திட்டம்**

**தமிழின மொழி மத விடுதலை இயக்கம்**

//உண்மை நகல்//

//இதன் மூலநகல்: சித்தரடியார் சோ.இரவீந்திரன் அவர்களின் கையெழுத்தில் ஆரம்பிக்கப் பட்டு சித்தரடியார் இரா.சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் தொடர்ந்து இருந்தது..//

# எங்களுக்குத் தெரியும்! உங்களுக்குத் தெரியுமா?

# மார்கழி மாதம் பீடை மாதம் என்பது சரியா?

மெய்யான இந்துமதத்திற்கும் பொய்யான ஹிந்துமதத்திற்கும் இடையேயுள்ள வரலாற்று வேறுபாடுகளையும், தத்துவ சித்தாந்த புராண இதிகாச பழக்க வழக்க சடங்கியல்..... வேறுபாடுகள், மாறுபாடுகள் முதலிய அனைத்தையும் விளக்கி யுரைக்கும் பணி துவக்கப் பட்டு இருப்பதே இந்து மதத்தையும், இந்துமத மூலவர்களான தமிழர்களையும், இந்துக்களையும் காப்பாற்றுவதற்குத்தான். தங்களுடைய கேள்வியின் விளக்கம் இப்பணிக்கு அணி செய்யும்.

ஆண்டுக்குரிய 12 மாதங்களையும், வாரத்துக்குரிய ஏழு (7) நாட்களையும் அறுபது ஆண்டுகளுக்கு ஒரு முறை மீண்டும் ஆண்டுகளின் பெயர் துவக்கத்திலிருந்து மீண்டும் வரும் செயல் திட்டத்தையும் வகுத்தவர்கள் இம்மண்ணுலகின் இயற்கையின் விதிகளை ஆராய்ந்த பதினெண் சித்தர்களும், பதினெட்டாம்படிக் கருப்புக்களும் ஆவார்கள். இவர்களின் கருத்துப்படி மாதங்களில் சிறந்தது மார்கழி மாதம்தான். எந்த நல்ல காரியம் துவக்க வேண்டுமென்றாலும் இந்த மார்கழியில்தான் துவக்க வேண்டும். அதாவது திருமணம், கால்கோள் விழா, குருகுலக் கல்வி, வழிபாட்டு நிலையப் பூசைகள்..... முதலிய அனைத்தும் மார்கழி மாதத்தில்தான் செய்ய வேண்டும் என்பது மெய்யான இந்துமதத்தில் சட்டபூர்வமான அதிகாரப் பூர்வமான விதியாகும்.

**“பீடு நிறைந்த மாதம் = பெருமைகள் மிகுந்த அரியன செய்தற்குரிய மாதம் வாழ்வியல் நிகழ்ச்சிகள் அனைத்திற்கும் உகந்த மாதம். ‘பீட மாதம்’ = அருட்பீடம், குருபீடம், கருப்பீடம், கருமப்பீடம், திருப்பீடம்...... முதலிய பீடங்களை அமைப்பதற்குரிய குல வளர் மாதம் = அருளுலகுக்கு மிக மிக சிறந்த மாதம்.”**

அனைத்து வகையான கலை வல்லார்களும் இந்த ஒரு திங்கட்குரிய முப்பது (30) நாட்களும் அதிகாலையில் தங்களுடைய கலைகளைப் பயிற்சி செய்தால் நல்லது. அவர்கள் ஆண்டு முழுதுமுள்ள 11 மாதங்களில் பயிற்சி செய்யாவிட்டாலும் பாதகமில்லை..... என்று இப்படிக் குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம், குருபாரம்பரியம் முதலியவை தெளிவாகக் கூறுகின்றன. எனவே, மார்கழி மாதத்தைப் பீட மாதமென்று வெறுத்து

ஒதுக்கும் கருத்தையும், பழக்கத்தையும் புகுத்தியவர்கள் பிற மண்ணினரான பிருமணர்கள் எனப்படும் வடஆரியர்களே. அதாவது இந்த வடஆரியர்கள் மெய்யான இந்து மதத்தையும்; இந்து மத மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்களேயும் அருள் அற்றவர்களாக, ஆற்றலற்றவர்களாக முறையான பயிற்சியும் தேர்ச்சியும் பெற முடியாதவர்களாகச் செய்வதற்காகத்தான் பொய்யான ஹிந்து மதத்தின் மூலம் மார்கழி மாதத்தை வெறுத்து ஒதுக்கச் செய்தார்கள். இதனைப் புரிந்து இனிமேலாவது நம்மவர்கள் மார்கழி மாதத்தை சிறப்பாகக் பயன்படுத்த வேண்டும். .

**//உண்மை நகல். இதன் மூலநகல்: சித்தரடியான் MR சீனிவாசன் அவர்களின் கையெழுத்தில் இருந்தது.//**

---

# "தீபாவளிக்கும் நரகாசுரனுக்கும் தொடர்பில்லை..."

ஓர் அசுரனை, அரக்கனை, அநீதிக்காரனை ... அழித்ததற்காக ஒரு திருநாள், திருவிழா, கொண்டாட்டம்.... தோன்றியிருக்குமா? இருக்காது. ஏனெனில், அந்தகன், இடும்பன், இராவணன், இரணியன், சலந்தரன், பகன்..... முதலியோரின் அழிவுக்குத் திருவிழாவோ! திருநாளோ! கொண்டாட்டமோ! .... தோற்றுவிக்கப் படவில்லை.

பிறகு ஏன் நரகாசுரன் கதைக்கும் தீபாவளிக்கும் தொடர்பு உண்டாக்கப் பட்டது? பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதத்தில் தீபாவளித் திருநாள் 'சோதி வழிபாடு', 'தீப வழிபாடு', 'ஒளி வழிபாடு', 'சூரிய வழிபாடு', 'சந்திர வழிபாடு', 'விண்மீன் வழிபாடு', 'முத்தீ ஓம்பல் வழிபாடு', 'நெருப்பு வழிபாடு', .... என்று சிறப்புக்களைப் பெற்றுள்ளது. இத் திருநாளில் இந்துமதக் கூட்டு வழிபாட்டால் இந்துமத ஒற்றுமையும் பற்றும் பாசமும் கட்டிக் காக்கப் பட்டன.

"ஒவ்வொரு இந்துவும் தீபாவளியை முன்னிட்டு ஏழைகளுக்கும், அன்னியர்களுக்கும் நீராட நல்லெண்ணை, சீயக்காய்; கட்டிக் கொள்ளப் புதிய ஆடைகள், சரிசமமாக உட்கார்ந்துண்ண அறுசுவை உணவு; இயன்ற அளவு தமது ஆண்டு வருமானத்தில் சரியான கணக்குக்குரிய தொகையில் [ஆறில் ஒரு பங்கை ஏழைகளுக்கும், நண்பர்களுக்கும், அன்னியர்களுக்கும் நன்கொடையாக வழங்குவது] ஆறில் ஒரு பங்கு தொகை முதலியனவற்றை வழங்க வேண்டும்.-" என்று கூறுவதுதான் மெய்யான இந்துமதம். நரகாசுரன் கதையைக் கூறுவதுதான் பொய்யான ஹிந்துமதம். இந்த ஹிந்துமதமே பிருமணருடையது. இந்துமதத்தைக் கெடுத்ததே இந்த ஹிந்துமதம்தான்.

# ஒளி வணக்கமே இந்துமதம்

சுடர் வழிபாடே இந்துமதம்

விளக்கைப் பூசை செய்வதே இந்துமதம்.

சோதியைக் கும்பிடலே இந்துமதம்.

தீயைப் போற்றலே இந்துமதம்.

அருட்சுடரால் அக இருளகற்றலே இந்துமதம்.

பல்வேறு வகையான விளக்குகளைப் பயன்படுத்திப் பூசை செய்யும் தத்துவச் சிறப்புடையதே இந்துமதம்.

தீபாவளி, கார்த்திகைத் தீபம், ஏமசோதி, காமசோதி, சோமசோதி, வாமசோதி, ... முதலியன உணர்ந்து வழிபட்டுப் போற்றலே இந்துமதம்.

ஒளியால் மனிதனைப் படிப்படியாக ஒளியேற்றி நாற்பத்தெட்டு நிலைகளைப் பெறச் செய்வதே இந்துமதம். அதாவது, மனிதனைக் கடவுளாக்குவதே இந்துமதம். கடவுளென்று ஒரு முதலாளியைக் கற்பிக்காத மதமே இந்துமதம்.

**குவலய குருபீடம்.**
**குருமகாசன்னிதானம்,**
**ஞாலகுரு சித்தர் கருவூரார்**
**6-2-86**

---

**கேள்வி:- கார்த்திகைத் தீபத் திருநாள் எதற்கு?!?!?!** *எங்களுக்குத் தெரியும்; உங்களுக்கு?!....*

**பதில்:-** கார்த்திகை என்பது ஆறு விண்மீன்களின் கூட்டம். அதாவது கூடி வாழ வேண்டும், நட்பாக இருக்க வேண்டும், சகோதரத் தத்துவம் செயலாக வேண்டும். => அப்பொழுதுதான் அகமும் புறமும் ஒளிமயமாகிடும். இது வடநாட்டவர் “ராக்கிபந்தம்” என்று கொண்டாடப்படும் திருநாளுக்கு மூலகாரணமாகும். தென் நாட்டவர் மறந்தனர், வட நாட்டவர் போற்றுகின்றனர்.

*- சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி பிள்ளை*

# அருட்போர் ...

... ... அன்புச் சூழ்நிலையை, அமைதிச் சூழ்நிலையை, நிம்மதிச் சூழ்நிலையை, ஒற்றுமைச் சூழ்நிலையை .... தொடர்ந்து காப்பாற்றுவதற்காக, "நன்கு பயிர் செழித்து வளர்வதற்காகப் பயிர்களின் ஊடே முளைக்கின்ற களைகளை வேருடன் பிடுங்கி எடுக்க வேண்டும்" என்ற உலகியல் நடைமுறைப்படி **அருட்போர்** நிகழ்த்தித்தான் ஆகவேண்டும்! ஆகவேண்டும்!! ஆக வேண்டும்!!! அதாவது நாட்டில் அமைதியைக் காக்க வேண்டுமென்றால் ஆயுதம் தாங்கிய காவல் படை தேவை! இக் கருத்தின் விளக்கமாகத்தான் இந்துமத கடவுள்கள் அனைவரும் போர்க்கோலத்தில் காவல் பணியினைச் செய்கிறார்கள். இதனால்தான் இந்துமதத்தின் நான்குயுக வரலாறும் அருட்போரின் வரலாறுகளாகவே இருக்கின்றன. இருந்து வருகின்றன. இனியும் இருக்கப் போகின்றன. ... ...


## இந்து இலக்கியக் கழகத்தின் பிற வெளியீடுகளையும் வாங்கிப் படியுங்கள்.

| | | |
|---|---|---|
| 1) | மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழி | ரூ.108/- |
| 2) | இந்துவேதம் தரும் பூசைமொழி, பூசைமுறைகள் | ரூ. 5/- |
| 3) | எந்த மானுடம் இந்த மானுடம் | ரூ.18/- |
| 4) | சிந்திக்கலாமா? | ரூ.36/- |
| 5) | இருக்கு வேதத்தில் பெருமால் காயந்திரிகள் | ரூ.50/- |

## இவ்வெளியீடுகள் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

1) சித்தரடியான் திரு கார்த்திக் சிவராமன், கிழக்கு தாம்பரம், சென்னை, 9972130609
2) சித்தரடியான் திரு வீரபாண்டி, மதுரை, 9994983391
3) சித்தரடியான் திரு சங்கிலி கருப்பசாமி, திருச்சுழி 9655017508
4) சித்தரடியான் திரு மோகனரங்கம், திருவொற்றியூர், சென்னை 9840670874
5) சித்தரடியான் திரு சந்திரன், புன்னப்பாக்கம், வெங்கல், 9943670235
6) சித்தரடியார் திரு இரமணா, ஆரணி, 9629450166

**11வது ஞானச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர்.**

**இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார்.**

**இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.**



வழிபாட்டு நிலையங்களே மானுடத்தின் விழிகள்

உருவ வழிபாடே அருவுருவ சித்தியின் சத்தி நிலை



அம்மையப்பர்

Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்).
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
Printed at Kavin Printers, Madurai.

**www.gurudevar.org** **Email: indhuism@gmail.com**